# அ
# க
# தி



எம்முடைய தாயகமும் வடக்கே

5/=

## ஐக்கிய சமுதாயம்.

மேலும், நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு) நீங்கள் பிரிந்து விட வேண்டாம்.

அல் குர்ஆன்- ஆல இம்ரான் வசனம் 103

அன்றி நீங்கள், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்ப(ட்)டு (உங்களுக்குள் ஒற்றுமையாயிரு)ங்கள். உங்களுக்குள் தர்க்கித்துக் கொள்ளாதீர்கள். அவ்வாறாயின் நீங்கள் தைரியத்தையிழந்து, உங்கள் வலிமை குன்றிவிடும். ஆகவே, நீங்கள் (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) பொறுமையாக இருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையோர்களுடன் இருக்கின்றான்.

அல் குர்ஆன். அன்பால் - வசனம் 46.

விசுவாசிகள் (யாவரும்) நிச்சயமாகச் சகோதரர்களே! ஆகவே, உங்கள் சகோதரர்களுக்கிடையில் (ஒழுங்கையும், சமாதானத்தையும் நிலை நிறுத்தி) சுமுகமாக இருங்கள் (இதில்) அல்லாஹ்வுக்குப் பயந்து நடவுங்கள். (இதனால்) அவனுடைய கிருபையைப் பெறலாம்.

அல் குர்ஆன் ஹுஜ்ராத் - வசனம் 10.

# அகதி

அகதி
இதழ் 1

தொடர்புகள்
வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு
15, ரோஹினி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6.
தொலைபேசி :586660
பெக்ஸ் :586660

"AHATHI"
Published by
NORTHERN MUSLIMS RIGHTS ORGANIZATION
15- Rohini Road,
Colombo - 6.
Sri - Lanka

இச்சஞ்சிகையில் வெளியாகும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியோரே பொறுப்புடையவர்கள்

## 'அகதி'

மனிதனுக்கு பல சந்தர்ப்பங்களில் எதிர்பாராத சம்பவங்கள் இடம் பெறுவதுண்டு. அதில் பெறும் பகுதியை மனிதன் துணிச்சலோடு சந்தித்து வெற்றி பெறுகிறான். சிலவற்றைக் கண்டு பயந்து பின்வாங்கி ஓடுகின்றான். இன்னும் சிலவற்றிற்காக எதிர் நீச்சல் அடிக்கிறான். இவ்வாறாகவே மனித வாழ்க்கை அமைந்துள்ளது.

இவ்வகையிலேயே, வடக்கிலே வாழ்ந்த முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கையில் அதிர்ச்சியான ஒரு சம்பவத்திக்கு ஆளானார்கள். ஆம், அவர்கள் தமது சொந்த தாயக மண்ணிலிருந்து அவர்களது உயிரையும், மானத்தையும் தவிர சகல உடைமைகளும் பறிக்கப்பட்டு இரண்டு மணிநேர அவகாசத்தில் விரட்டியடிக்கப்பட்டார்கள்.

எழுத்துக்குள் அடங்காத, வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாத இன்னோரன்ன இடர்களைச் சந்தித்துக் கொண்டவர்களாக தென்னிலங்கையை அடைந்தார்கள்.

இவர்களின் இந்த அவல நிலையை கேள்வியுற்ற தென்பகுதி முஸ்லிம் சகோதரர்கள், மனிதாபிமான உணர்வுமிக்கவர்கள் எல்லைக்கே வந்து இவர்களை ஆரத்தழுவி ஆறுதல் கூறி நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச் சென்றார்கள். இவ்வகையில் வடக்கிலே ஒன்றிணைந்து வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் பிரிந்தார்கள், இல்லை சிதறினார்கள். இவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு பல சமூக நிறுவனங்கள் முன்வந்து பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி 'அகதி' களின் இரத்தக் கண்ணீரைத் துடைக்க ஆர்வத்துடன் உழைத்தார்கள்.

'அகதி' கள் மத்தியிலும் பல 'அகதி' அமைப்புக்களும் உருவாகியது. அவர்களும் தங்களால் முடிந்தளவு தமது மக்களுக்காகப்

பாடுபட்டார்கள். இன்றும் பாடுபட்டுக் கொண்டிருப்போரும் இருக்கிறார்கள்.

இந்தநேரத்தில், 'அகதி' களின் பிரச்சினைகளை வெளியுலகிக்கு கொண்டுவருதற்காக தேசிய பத்திரிகைகளும், வாராந்த பத்திரிகைகளும், இதழ்களும் தமது பங்களிப்பை செய்யத் தவறவில்லை. 'அகதி'களும் இப்பத்திரிகைகளேயே நம்பியிருந்தனர். பொதுவாக இப்பத்திரிகைகள் நாட்டில் உள்ள 'அகதி'களின் செய்தியை வெளியிட்ட பொழுதிலும். 'அகதி' யின் ஒருமித்த குரலாக இப்பத்திரிகைகள் எதுவுமே இருக்கவில்லை - இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

எனவேதான் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு 'அகதி' என்ற சஞ்சிகையை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்தது.

இப்பத்திரிகை பொதுவாகவே இந்நாட்டில் உள்ள முஸ்லிம் அகதிகள் பற்றிய செய்தியை எடுத்துக்கூறுவததோடு, குறிப்பாக வடக்கு அகதி முஸ்லிம்களின் உரிமைக் குரலாக வெளிவரவிருக்கிறது.

இலங்கையிலுள்ள 'அகதி'களில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது வடக்கு முஸ்லிம்கள்தான் என்றால் இதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

வடபகுதிக்குள் குறிப்பிட்ட ஊர்களில் வாழ்ந்த இந்த முஸ்லிம்கள் இன்று தொலை தூரங்களினால் பிரிக்கப்பட்டிருப்பதனால் தங்களுக்கிடையே எவ்வித தொடர்புகளுக்கும், தகவல் பரிமாற்றத்திற்கும் சந்தர்ப்பமின்றி, தங்களுடைய மக்களது செய்திகளை அறிய முறையுமின்றி, தவித்துக் கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் இம்மக்களுக்கு ஒரு தொடர்பு சாதனமாக இம்மக்களின் செய்திகளை சுமந்து செல்லும் ஓர் ஊடகமாக 'அகதி' பத்திரிகை அமைவதால் பிரதேசவாதக் கண்ணோட்டத்தில் இதனை நோக்க முடியாது.

இப்பத்திரிகையானது 'அகதி' மத்தியில் இருக்கும் பலவீனங்களைப் போக்கி அவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி, தன்னம்பிக்கைகளை ஏற்படுத்தி அவர்களை ஒன்றுபட்ட சமுதாயமாக, ஒரே குரலில் தங்களது சகல பிரச்சினைகளையும் முன்வைக்கக்கூடிய சமுதாயமாக ஆக்க முயற்சிப்பதோடு, அகதிகள் எண்ணற்ற பிரச்சினைகளை எதிர்நோக்கி அவற்றை நிவர்த்திக்கத்தக்க வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அவர்களின் தேவைகள் - பிரச்சினைகள் இவைகளை நிவர்த்திக்கும் வழிவகைகளையும் எடுத்துக் கூறும்.

தற்போது தங்களது கையில் தவழும் இப்பத்திரிகையானது எமது முதல் வெளியீடாகும். பத்திரிகையொன்றை நடத்துவது சுலபமான விடயமல்ல என்பதை நாம் நன்கு அறிவோம். இருப்பினும் இவ்வாறான ஒரு சுமையை நாம் சுமப்பதற்கு முன்வந்தோமெனில் இந்த ஆக்கபூர்வமான முயற்சியை எமது 'அகதி' மக்கள் வரவேற்பார்கள், ஆக்கமும் ஊக்கமும் தருவார்கள் என்ற உயர்ந்த நம்பிக்கையேயாகும்.

இப்பத்திரிகை ஐந்து ரூபாய் மட்டுமே. இது ஒரு இறாத்தல் பாணின் விலையாகும். ஆம் ஒரு நேர வயிற்றை நிரப்பும் உணவின் பெறுமதியாகும்.

அதே நேரத்தில், இந்த ஐந்து ரூபாய் எமது மக்களின் வருவாயையே மட்டும் நம்பி 'அகதி' முகாம்களின் அருகருகே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மினி சினிமாவிற்கான நுழைவுக்கட்டணமுமாகும் என்பதையும் நாம் அறிவோம்.

சமூகத்தை அழிவின்பால் இட்டுச்செல்லும் அனாச்சாரக் காட்சிகளுக்குச் செலவிடும் எமது மக்கள் இதற்கு பணம் தந்து பெற்று படிக்க முயற்சிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

இப்பத்திரிகையின் உயிர் 'அகதி' சமுதாய மக்களின் கையில் இருக்கிறது. அவர்கள் தரும் ஆதரவே இது உயிர் வாழ போதுமான ஆகாரமாகும்.

# 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு'

## ஓர் அறிமுகம்

வடமாகாண முஸ்லிம்கள் பிறந்த மண்ணகத்தை விட்டு துரத்தப்பட்டதன் பின்னர் வருடங்கள் எம்மைவிட்டு உருண்டோடுகின்ற பொழுதும் மக்களது வாழ்வில் நம்பிக்கை ஒளிக்கீற்றுக்கள் எதுவுமே தென்படாததால் அவர்கள் விரக்தியில் வாழ்வை நகர்த்துகின்றனர். விரக்தியால் மடிந்தவர்கள் ஆயிரத்திற்கும் அதிகம்.

எமது மக்களில் பலர் மீண்டும் தமது தாயக மண்ணுக்குச் செல்வோம் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டனர். இதனை வெறும் பகற்கனவாகவே பலர் நினைக்கின்றனர். இதனைப் பற்றி எமது மக்களிடம் பேசப் போனால் நையாண்டித்தனமும், கிண்டல்களுமே பரிசாகக் கிடைக்கின்றன.

அதே நேரத்தில், மீண்டும் எப்பொழுது எமது தாயக மண்ணைத் தரிசிப்போம், என்ற ஆதங்கத்துடன் அந்நாட்களை எண்ணும் மக்களும் எம்மத்தியில் இல்லாமலில்லை.

வேதனை தரும் இந்த சோதனை வரலாறு இவ்வாறே தொடர்வதற்கு அனுமதியளிக்கலாமா?

தாயாக மண்ணை மீட்கும் உரிமைப் போராட்டத்தில் தார்மீக வழியில் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்ற முடிவின் அடிப்படையில் உதயமானதே வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு ஆகும்.

இந்த அமைப்பு உதயமாவதற்கு முன்பாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. வடமாகாண முஸ்லிம்களை ஒன்று திரட்டி ஒரு கருத்துப் பரிமாற்றத்திற்கான சந்தர்ப்பத்தை வழங்கி அவ்வபிப்பிராயத்தை ஒன்று சேர்த்து "வட மாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி 26.07.1992 அன்று கொழும்பு இஸ்லாமிய கல்வி நிலையத்தில் நடைபெற்ற மாநாட்டுச் சிந்தனைகள்" என்ற தலைப்பில் கைநூல் ஒன்றை வெளியிட்டோம்.

2. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஓர் ஒன்றுகூடலை ஏற்படுத்தி அவர்களது அபிப்பிராயங்களையும் அறிந்ததோடு, சமூக விழிப்புணர்ச்சிக்கான அவர்களது பங்களிப்புப் பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டு அதனையும் வெளியிட்டோம்.

3. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களிலுள்ள கல்விமான்களையும், சமூக சேவையாளர்களையும் மற்றும் ஆர்வமுள்ளவர்களையும் கொண்டு மீள் குடியேற்றமா? அல்லது நிரந்தரக் குடியேற்றமா? என்ற தலைப்பில் ஓர் கருத்தரங்கை (ஓர் ஆய்வு - மஸூரா) நடத்தி இறுதியில் மீள் குடியேற்றமே முடிவாகக் கொள்ளப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு - இதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஓர் அமைப்பின் அவசியம் உணர்தப்பட்டு 1992ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு' NORTHERN MUSLIMS' RIGHTS ORGANIZATION (NMRO)" **'எம்முடைய தாயகமும் வடக்கே'** என்ற இலட்சிய தாகத்தோடு கீழ்வரும் பிரதான குறிக்கோள்களுடன் உதயமானது.

1. மீண்டும் பூர்வீகவிடத்தில் வாழும் உரிமை.

2. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையாத ஆவண இழப்பீடுகளை மீளப் பெறும் உரிமை.

3. மீளக் குடியேறும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பொழுது சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.

4. வடமாகாணத்தில் மீளக் குடியேறும் போது அச்சமின்றி- தனித்துவத்தோடும், பூரண பாதுகாப்புடனும் வாழும் அரசியல் உரிமை.

மேற்படி, குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் செயல் திட்டங்களை இவ்வமைப்பானது நடைமுறைப்படுத்தும்.

1. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளிவிபரங்களைத் திரட்டுவது.

2. அவர்கள் மத்தியில் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்தல்.

3. இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் மத்தியிலும், சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றியும், அகதிகளாக்கப்பட்ட சூழ்நிலை பற்றியும் அகதிகள் தொடர்பான அறிவையும் வழங்குதல்.

4. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் மாநாடுகள் போன்றவற்றை நடத்துதல் இவ்வகையான முயற்சிகளின் பிரதிபலன்களை பிரசுரங்களாக வெளியிடுதல்.

5. அரசியல் தீர்வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதற்காகத் தயார்படுத்தல்.

6. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு தேசிய சர்வதேச ரீதியில் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்தல் என்பதாகும்.

## அங்கத்தவர்களாக விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பில் அங்கம் வகித்து தாயக மண்ணை மீட்பதற்கும் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வர விரும்புவோர் இதன் அங்கத்துவத்திற்காக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் நபர்களுக்கு அங்கத்துவ விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

செயலாளர்,

'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு,

15, ரோகினி வீதி,

வெள்ளவத்தை.

## எமது அடுத்த இதழ்

## 'அகதி முகாம் செய்திகள்'

## 'எண்ணக் குமுறல்கள்'

ஆகிய பகுதிகளைத் தாங்கி வெளிவரவிருக்கிறது. வாசகர்களின் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

★இச் சஞ்சிகையில் இடம் பெறுவதற்காக எமது மக்களிடமிருந்து கதை, கவிதை, கட்டுரை இன்னும் முகாம் செய்திகள், வாழ்க்கை அனுபவங்கள் ஆலோசனைகள் என பல்துறை விடயங்களையும் ஆக்கங்களையும் எதிர்பார்க்கிறோம்.

எனவே, தாராளமாகத் தங்கள் ஆக்கங்களை தரமாகத் தயாரித்து அனுப்புங்கள். இத்துடன் இப்பத்திரிகை வெளிநாடுகளிலுள்ள எமது 'அகதி' சகோதரர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதால் அவர்களது முகவரியை எமக்கு அனுப்பி வைத்தால் நாமே அவர்களுக்கு நேரடியாக அனுப்பி வைப்போம்.

# வாக்காளர் பதிவு...!

இந்த வருடம் நாடு இரு தேர்தல்களை எதிர் நோக்கியுள்ளது. நாட்டில் அமைதியற்ற நிலைமை தொடரும் இக்கால கட்டத்தில் யுத்த சூழ் நிலைகளின் காரணமாக தமது சொந்த இருப்பிடங்களை இழந்த 'அகதி'களாக நாட்டின் எட்டுத்திக்குகளிலும் சிதறி வாழும் முஸ்லிம்களின் நிலை என்ன?

நாட்டில் கடந்த காலங்களில் அமைதி நிலவியபோது வாக்காளர் பதிவு ஒழுங்காக இடம் பெற்று வந்தன. ஆனால் தற்பொழுது மக்கள் அகதிகளாக முகாம்களிலும், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வசிக்கும் இச்சந்தர்ப்பத்தில், இந்த 'அகதி' களின் பதிவு எப்படி அமைய வேண்டும்?

அண்மையில் வாக்காளர் பட்டியலில் கிராம சேவகர்களால் 'அகதி' கள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர், அவர்களது பெயர்கள் வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டதைக் காரணமாகக் காட்டி உலக உணவு ஸ்தாபனம் கொடுத்து வருகின்ற உணவை அகதிகளுக்கு கிடைக்காமல் செய்யும் நடவடிக்கையை பிரதேச செயலகங்கள் மேற்கொண்டுள்ளது.

இதன் பின்பு எழுப்பப்பட்ட 'குரல்' களின் காரணமாக நிவாரணம் தொடர்ந்து வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டது.

ஆனாலும் இன்னும் இதனால் பாதிக்கப்பட்ட 'அகதி' கள் ஆங்காங்கே இருந்தே வருகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் வாக்காளர் பதிவிலிருந்து இந்த 'அகதி' களின் பெயர்களை நீக்குவதற்கும் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டனர்.

தற்போது 'அகதி' கள் வாக்காளர்கள் பதிவில் தம்மை பதியும் வாய்ப்பை இழந்து நிற்கின்றனர்.

ஒரு ஜனநாயக நாட்டில் தனி மனிதனுக்கு உள்ள உரிமையில் பிரதானமானது ''வாக்குரிமை'' யாகும். இதற்குரிய வாய்ப்பை ஒரு மனிதன் அந்நாட்டில் இழக்கும் பொழுது அது அவனது தனிமனித உரிமையை பாதிப்பதாகவே அமைகிறது.

ஆகையினால் 'அகதி'களின் பெயர்கள் வாக்காளர் பதிவில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்பதை பொறுப்புள்ளவர்கள் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் சிறுபான்மைச் சமூகங்களின் ஒரு பெறும் பகுதியினர் 'அகதி' களாக வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில் தேர்தலுக்கான திகதிகள் குறிப்பிடுவதும் பிற்போடுவதுமாக தேர்தலுக்கான முஸ்தீபுகளைச் செய்துவரும் அரசு இந்த 'அகதி' களும் இந்த நாட்டின் பிரஜைகளே, அவர்களுக்கும் வாக்குரிமை உண்டு என்ற அடிப்படையில், அவர்களது வாக்குரிமையை கிடைக்க ஆவன செய்வது அரசினது தலையாய கடமையாகும்.

இந்நிலையில், வடக்கிலிருந்து மூன்று வருடங்களுக்கு முன்பு விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களின் நிலை என்ன? அவர்கள் தற்போது தற்காலிகமாக தங்கியிருக்கும் பகுதிகளிலேயே அவர்களைப் பதிவு செய்வதா? அல்லது அவர்களது சொந்த வாழ்விடங்களிலேயே பதிவு செய்வதா? இதனை வடமாகாண முஸ்லிம் சமூகமும் சிந்திக்க வேண்டும்.

பொதுவாகவே, ஒரு சட்டம் கூறப்படுகின்றது அதாவது ஒருவர் ஆறுமாதகாலம் குறிப்பட்ட ஓர் இடத்தில் வாழ்ந்து வருவாராயின் அவரை அப்பகுதியின் வாக்காளராகப் பதிவு செய்ய முடியும் என்பதாகும்.

இது ஒரு வகையில் ஆறுதலைத் தந்த பொழுதும், வடபகுதி முஸ்லிம்கள் தங்களுடைய தாயக மண்ணை விட்டு விரட்டியடிக்கப்பட்டவர்கள் என்ற கண்ணோட்டதோடு இப்பிரச்சினையை பார்க்கும் பொழுது, அகதிகள் இருக்கும் இடத்திலேயே அவர்களை வாக்காளராகப் பதிந்துவிட்டால் அவர்களது மண்ணை மீட்டெடுக்கும் அவர்களது உரிமைப் போராட்டமும் சிதைந்துவிடுவதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது.

ஆகையினால் 'அகதி' களாக இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் வடபகுதி முஸ்லிம்கள் தமது பதிவுகள் தங்களது சொந்த இடத்திலேயே பதியப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

# முஸ்லிம்கள் மீதான அராஜகம்

## பின்னணிகளும், சில புரிதல்களும்.

யாழ்ப்பாணம், மன்னார் போன்ற வடக்கின் ஏனைய மாவட்டங்களிலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு இப்போது மூன்று வருடங்களாகின்றன. பல்லாயிரக்கணக்கான வடபகுதி முஸ்லிம்கள் போதிய வசதியற்ற நிலையில் அகதிமுகாம்களில் கேள்விக்குறியான எதிர்காலத்தோடு வாழ்கின்றனர். இவர்களில் அநேகம்பேர் புத்தளம், அநுராதபுரம், குருநாகல் போன்ற பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியிருக்கின்றனர். இந்த முகாம்களை பார்வையிட்ட வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும், பார்வையாளர்களும் மனிதாபிமான உதவி வழங்குவோரும் ''பரிதாபத்திற்குரிய / இரக்கத்திற்குரிய அப்பாவிக்கூட்டம்'' என வர்ணித்துள்ளனர்.

அதிர்ஷ்டமிழந்த இந்த அப்பாவி முஸ்லிம்களை மீளக்குடியமர்த்துவது சம்பந்தமாக அரசாங்கமோ, முஸ்லிம் அரசியல் தலைமைகளோ எதுவிதமான பயனுள்ள நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகத் தெரியவில்லை.

1990ம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியளவில் ஈழப்போராளிகள் எனத் தங்களை இனங்காட்டிக் கொண்டவர்களின்... இரண்டுமணிநேர இடைவெளியில் வெளியேற்ற உத்தரவின் பேரில் திக்கற்றவர்களாக வெளியேறியவர்கள் இதுவரை எந்தவிதமான தீர்மானங்களுமின்றி தொடர்ந்தும் 'அகதி' என்ற அந்தஸ்திலேயே வாழ்ந்து வருகின்றனர்.

தங்களது உரிமைகளுக்காகப் போராடுகின்ற ஒரு குழு இன்னொரு சமூகத்தின் சாதாரண இருப்புரிமையைக்கூடப் பறித்தெடுத்தது முஸ்லிம்களின் ஈழப் போராட்டத்திற்கான ஆதரவினை முற்றாக நீக்கிவிட வழிசெய்தது. இந்தநிலை இன்னொரு பாதக விளைவினையும் ஏற்படுத்தியது. அதாவது நீண்ட நெடுங்காலமாக தமிழ் முஸ்லிம் மக்களிடையே நிலவிவந்த புரிந்துணர்வான உறவினைத் தூரப்படுத்தி ஒருவரையொருவர் பகைமைப் பண்புடன் நோக்கும் நிலையாக அது மாறியுள்ளது. இதற்கு ஒரு காரணத்தைக் குறிப்பிடலாம். அதாவது தமிழ்ச் சமூகத்தின் உரிமைகளுக்காக போராடும் ஏதோ ஒரு வகையில் அங்கீகரிக்கப்பட்ட குழுவான விடுதலைப்புலிகளின் பிரதிநிதித்துவமே இந்த நிலை ஏற்படக் காரணமெனலாம்.

இவர்களின் திட்டமிட்ட செயலே வடபகுதி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்குக் காரணமெனலாம். இந்தச் செயலை மறைத்து வேறு வகையான நியாயப்படுத்தலை பிரபாகரன் பி.பி.ஸி வானொலிப் பேட்டி கொடுத்திருந்ததை நாம் அண்மையில் அறிந்தோம்... ''கிழக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களில் முஸ்லிம்களால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்ற ஒரு சூழல் நிலவியது. அந்தச் சூழலின் எதிர்விளைவாக முஸ்லிம்கள் தமிழர்களால் - பழிவாங்கப்படும் நிலை ஏற்படலாம் என்று அஞ்சியே முஸ்லிம்களை நாம் அவர்களின் பாதுகாப்புக் கருதி வெளியேற்றினோம்'' என்றார்.

தனிராஜ்யம் வேண்டிப் போராடுபவர்கள் அங்குள்ள சிறுபான்மையினரின் பாதுகாபபுக்கு ஏன் பூரண உத்தரவாதம் அளிக்கவில்லை?

தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான பழிவாங்கல் நிலைமைகளுக்கு அடிப்படைக் காரணமாய் இருந்தவர்கள் யார்?

ஆதிக்க சக்திக்கெதிரான போராட்டத்தை அப்பாவி மக்கள் மீது திருப்பி முஸ்லிம் கிராமங்களை அழித்தும், தொழுது கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி வெட்டியும், சுட்டும் கொன்று... முழுத்தமிழ் மக்கள் மீதான வெறுப்புணர்வை முஸ்லிம்களில் ஏற்படுத்தியது யார்?

முஸ்லிம் ஊர்காவல் பிரிவு உருவாக்கப்படக் காரணமாக இருந்தவர்கள் யார்...?

இந்தக் கேள்விகள் தமிழ் நடுநிலைமைவாதிகளாலும் இன்னும் பலராலும் விடுக்கப்பட்டவைகள். பதில்கள் கிடைக்காத இந்தக் கேள்விகளுக்கு ஒரே ஒரு பதில்தான் பின்னணியிலிருப்பதாகத் தெரிகிறது.

அதாவது இவர்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்ற ஒரு சமூகம் என்ற இனவாதக் கண்ணோட்டம் வளர்ந்தமையும்... முஸ்லிம்கள் மதரீதியான சுயநிர்ணயம் கொண்டவர்கள்... அவர்கள் மொழி, அல்லது குறுகிய தேசிய வாதப் போராட்டத்துக்குள் இணைய மாட்டார்கள் என்று கண்டதன் விளைவுமே... முஸ்லிம்களுக்கெதிரான அநியாயங்களாக வெளிப்படுத்தப்பட்டன.

இதனை வடபகுதி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதன் பின்னர் புலிகளின் அரசியல் பேச்சாளர் யோகி அவர்களால் நிகழ்த்தப்படட உரை புரியவைக்கிறது.

''வடபகுதியிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது குறித்து இங்குள்ள தமிழ்மக்கள் ஆச்சரியமடைந்துள்ளனர் என்று தெரிய வருகிறது. நாம் ஏன் முஸ்லிம்களை வெளியேற்றினோம்? கிழக்குமாகாணத்தில் 4000 தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதில் 2000 பேர்வரை முஸ்லிம் ஆயதக் குழுக்களாலும், ஊர்காவற்படையினராலும் கொல்லப்பட்டிருக்கின்றனர். அது மட்டுமல்ல... முஸ்லிம்கள்... தங்களை அரபிகள், அரபிகளின் வழித்தோன்றல்கள் என்று சொல்லிவருகின்றனர். அவர்கள் சிங்கள அல்லது தமிழ் வழித் தோன்றகள் என்பதை ஏற்கிறார்களில்லை... இதை எல்லாம் அவர்கள் தங்களது சுயநலம் கருதியே சொல்கிறார்கள்... ஆனால் அவர்கள் தமிழர்கள்... அவர்கள் தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் மொழியிலேயே கற்றார்கள். அவர்களது கலாசாரம் அராபிய கலாசாரமல்ல.... அப்படியிருந்தால் அவர்களின் பெண்கள் பர்தா அல்லவா அணிய வேண்டும்... இங்குதான் அதையாரும் அணிவதில்லையே...!''

இந்தப் பேச்சுப் பகுதியிலிருந்து நாம் பலதைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

புலிகளின் ஈழக்கோரிக்கை... முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மை மதத்தனித்துவமுடையவர்ளின் உரிமைகளை மறுத்து ஓர் பரிமாற்று ஊடகமான மொழி, அல்லது இனம் சார்ந்த குறுகிய தேசியவாதக் கோரிக்கையாக மாறியுள்ளமை.

(''தமிழீழம் என்பது எந்த மதத்துக்குமோ, ஜாதிக்குமோ இடமில்லாத ஒரு மதச்சார்பற்ற நாடு'' - யோகி)

புரிந்து கொள்ள முடியாத ஒரு தமிழ்வாதம் மேலோங்கியிருப்பது... ''முஸ்லிம்கள் தாங்கள் தமிழர்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும், தமிழ்ப் பெண்களை மணமுடித்த அரபிகளின் சந்ததிதான் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்'' - யோகி.

இங்கு முஸ்லிம்கள் புரிந்து கொள்ள வேண்டியது யாதெனில் இஸ்லாம் என்ற உயரிய கொள்கையே முஸ்லிம்களை மொழி, தேசம்... இடம் , குலம், கோத்திரம் கடந்து இணைத்து வைக்கின்றது என்பதனை. அதன் சக்தியே... அதனது இவ்வாறான விரிந்த நோக்கியே உள்ளது என்பது புரியப்பட வேண்டும். 'அரபிகளால் முஸ்லிம்கள்' என்ற குறுகிய நோக்கு விடுத்து 'இஸ்லாத்தால் முஸ்லிம்கள்' என்ற பரந்த நோக்கு வரவேண்டும்.

மொழியை நாம் ஒரு பரிமாற்று ஊடகமாக மாத்திரம் கருதுவதால் எந்த நாடாயினும், அந்தந்த நாடுகளின் மொழிகளில் படித்தும், பேசியும் வருகிறோம். அந்த விடயம் இங்கு 'வேறொரு சாயம்' பூசியிருப்பதால் 'தமிழ் பாடசாலைகளில் தமிழில் கற்றதால் அவர்கள் தமிழர்களே..' என்று சொல்ல வேண்டிய தேவையில் யோகி சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குமாகவும், எங்களில் பலருக்குமாகவும் முஸ்லிம் சமூகம், அதன் தனிப்பண்புகள் பற்றியும் இங்கு சொல்ல வேண்டியிருக்கிறது.

''முஸ்லிம் என்பவன் ஓர் இனத்தைச் சார்ந்தவன் அல்லன்; இஸ்லாம் என்பது ஒரு

கொள்கை. எனவே, இஸ்லாம் மனிதர்களைக் கொள்கையின் அடிப்படையில் பிரிக்கிறதே தவிர இனம், மொழி, நாடு, என்பவற்றின் அடிப்படையில் பிரிவு காண முற்படாது.''

முஸ்லிம் சமூகம் தனக்கென தனியான நம்பிக்கைகளையும் குடும்பம், சமூகம், அரசு என்பனபற்றிய தனியான கோட்பாடுகளையும் கொண்டது. மனிதவாழ்வின் நடவடிக்கைகள் அனைத்திற்குமான சட்டதிட்டங்களையும் அது கொண்டுள்ளது. முஸ்லிம் சமூகம் அது சிறுபான்மையாகவோ அல்லது பெரும்பான்மையாகவோ வாழ்ந்தாலும் அதன் பண்புகள் இவைதான். இது சார்ந்த உரிமைகளே அதற்கு வழங்கப்பட வேண்டும். தேவைப்படின் அது சார்ந்த உரிமைகளுக்காகவே போராட வேண்டும். இவை இழக்கப்பட்ட அல்லது பறிக்கப்பட்ட ஒரு சூழலிலேயே நாம் குறிப்பாக வெளியேற்றப்பட வடபகுதிவாழ் முஸ்லிம்கள்- இருக்கிறோம்.

யோகியின் உரையின் அடுத்த பகுதி என்ன சொல்கிறது அவர்களது கலாசாரம் அரபு கலாசாரம் அல்ல; உண்மைதான் எங்களது கலாசாரம் இஸ்லாமிய கலாசாரம்.

அவர்களுடைய பெண்கள் ;பர்தா; அணிகிறார்களில்லை; பெண்களின் பர்தா பற்றி இங்கு பேசப்பட்டிருந்தாலும் நாம் அதனை சற்று ஆழமாக நோக்க வேண்டியிருக்கிறது. அதாவது இது ஒரு முஸ்லிமின் அடையாளப் பிரச்சினை, அதனை நாம் இழந்து கொண்டிருக்கிறோம் ...எமக்கான பண்புகள் மறைந்து கொண்டிருக்கின்றன. இங்கு அடையாளம், பண்புகள் என்றவுடன் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஆண்; பெண் உடைசார்ந்த வடிவங்களைக் கூறவரவில்லை. முஸ்லிம்களுக்கு அதுதவிர்ந்த இன்னும் எத்தனையோ அழகான, கால சூழலுக்கு பொருத்தமான அடையாளங்களும், பண்புகளும் இருக்கின்றன. அவற்றைத்தான் நாம் கரிசனையுடன் கவனிக்க வேண்டும். ஆக- ஒரு சமூகப் புனர்வாழ்வு இன்றியமையாததாகி விடுகின்றது.

யோகியாரின் சொற்பொழிவிலிருந்தும் அதற்கு முன்னாலும் பின்னாலும் ஏற்பட்ட நிலவரங்களிலிருந்தும் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ளலாம். அதாவது தமிழ்த் தேசிய வாத குறுஞ்சிந்தனையே இவை எல்லாவற்றுக்குமான காரணம், இந்தச் சிந்தனைதான் முஸ்லிம்களை அவர்களிலிருந்து அந்நியப்படவைத்தது.

இந்தச் சிந்தனைதான்... முஸ்லிம்களை... பள்ளிவாசல்களில் தொழுகையில் வைத்து கொலை செய்ய வைத்தது...இந்தச சிந்தனைதான்... வயலுக்கும் ...விறகு வெட்டக் காட்டுக்கும் சென்ற அப்பாவிகளை கொல்லவைத்தது...இந்தச்சிந்தனைதான்...75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்களை அவர்களது இருப்பிடத்திலிருந்து...வெறும் கையுடன் வெளியேற்றியது...இந்த சிந்தனைதான் ...அவர்களின் போராட்டத்திலும் கூட ஒரு பின்னடைவை ஏற்படுத்தி... அவர்களையும் கொஞ்சம் சிந்திக்க வைத்தது.

இந்தச் சிந்தனைக்கு நூறு ஆண்டுகளுக்குமேற்பட்ட பாரம்பரியம் இருக்கிறது. அதாவது...முஸ்லிம்களின் தனித்துவத்தையும், உணர்வுகளையும் மதிக்காத இந்தச் சிந்தனைகளுக்கும் ஒரு வரலாற்று பின்னணி இருக்கிறது.

1887ம் ஆண்டு ஸேர் பொன்னம்பலம் ராமநாதன் இந்தச் சிந்தனையை முன்வைத்தார். ''முஸ்லிம்கள் இனத்தால் தமிழர்கள், நம்பிக்கையால் முஹம்மதியர்கள், என்ற அவரது தேசியவாத சிந்தனையினடியாக... இன்றைய போராட்டத்தின் முஸ்லிம்களுக்கெதிரான நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

அன்று அதை எதிர்த்து வாதிட்டு... மறுப்புகூற ஒரு முஸ்லிம் (N.I.L.A. Azeez) உணர்வு பூர்வமாய்ச் செயற்பட்டார்... இன்று நாம் ...இது -அவரவர் விடை காண வேண்டிய கட்டாயக் கேள்வி!

**- இப்னு ஸுபைதா -**

# உண்மைப் பிரச்சினை...

ஓர் அடிமைப்படுத்தப்பட்ட சமூகம், ஆதிக்கம் செலுத்தும் சமூகத்திலிருந்து எப்படி விடுதலை பெறுவது?

ஒரு வலிமையற்ற சமூகம் தன்னை ஒரு வலிமை வாய்ந்த சமூகத்தின் கொடுமைகளிலிருந்து எப்படிக் காத்துக் கொள்வது?

பிற்பட்ட சமூகம் பலம் வாய்ந்த சமூகங்களுக்கு வாய்த்துள்ள வலிமையை எவ்வாறு பெறுவது? என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இக் கேள்விகளும் இன்னும் இவைபோன்ற இதர பிரச்சினைகளும் முஸ்லிமல்லாத சமூகத்தினருக்கு முக்கியமானவையும், மிகவும் முதன்மை வாய்ந்தவையுமாகும் இருக்கலாம்.

அவர்களின் சிரத்தைகள் முயற்சிகள் ஆகியவற்றின் கேந்திரமாகவும், அச்சாணியாகவும் அவை விளங்கலாம். ஆனால், முஸ்லிம்களாகிய நமக்கு அவை மட்டுமே முக்கியமானப் பிரச்சினைகள் அல்ல.

மாறாக நம் அடிப்படைக் கடமையின்பால் நாம் கைக்கொண்டு வந்துள்ள இன்னும் கைக்கொண்டு வரும் அலட்சியத்தின் பலன்களே இவைகள். இதுதான் நமது உண்மைச் பிரச்சினையாகும்.

நாம் நமது கடமையைச் செய்திருந்தால் மிகவும் சிக்கலான அமைதியை குழைத்திருக்கும் இத்தகைய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருக்க முடியாது.

தற்பொழுது நாம் இந்த சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்காக எடுக்கும் முயற்சிகளில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது நாம் நமது கடமையை நிறைவேற்றும் பணிக்காகும்.

இவ்வாறு செய்யும் பட்சத்தில் அல்லாஹ்வின் உதவியினால் நாம் பார்த்துக கொண்டிருக்கும் போதே நம்மை விட்டு நம்மைச் சூழ்ந்திருக்கும் இருள் அகன்று விடும்.

நாம் முஸ்லிம்கள் நம்மீது உள்ள கடமைகள் என்ன? நமது வாழ்விடங்களில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம்? என்பதை அகதி முஸ்லிம்களாகிய நாங்கள் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். அப்பொழுது நாம் என்ன செய்து கொண்டிருந்தோமோ, அதற்கான விளைவை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

முஸ்லிம்கள் என்று நாங்கள் எங்களைச் சொல்லிக் கொண்டும், இஸ்லாத்தின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டும், எமது சொல், செயல், அனைத்திலும் மிகுதியாக அறியாமையை (ஜாஹிலியத்தை) பரப்புவோராயும், இறைவனுக்கு இணைவைத்தல் (ஷிர்க்) உலக ஆசை, ஒழுக்கக் கட்டுப்பாடின்றி நடப்போராயும் இருந்து வந்தோம்.

அல்லாஹ்வின் வேதமாகிய அல் குர்ஆனை முகட்டில் வைத்துப் பாதுகாத்தோம். ஆனால், நாம் நேர்வழி பெறுவதற்காக நிராகரிப்பாளரிடமும், தீமையின் தோற்றுவாயிகளிடமும் சென்று கொண்டிருந்தோம்.

அல்லாஹ்வுக்கு அடிபணிவதாய் தஃவா செய்து கொண்டு ஒவ்வொரு ஷைத்தானுக்கும், தாகூத்துக்கும் (இறைநெறியை விட்டும் விலகிச் செல்லும் சக்திகளுக்கும்) அடிபணிந்து கொண்டிருந்தோம்.

நட்பையையும், பகையையும் ஒவ்வொருவரும் சொந்த விருப்பு, வெறுப்புக்காவே வைத்துக் கொண்டோம். ஆனால், அவற்றை இஸ்லாத்திற்காகச் செய்வதாகக் கூறிக்கொண்டோம்.

இத்தகைய நடவடிக்கைகளினால் இஸ்லாமிய அருட்பேற்றை நம் வாழ்விலிருந்து விலக்கி வைத்துக் கொண்டிருந்தோம்.

அல்லாஹ்வின் நியதிப்படி இந்தச் செயலுக்கு எவ்வளவு ''அதாபுகள்'' ஏற்பட வேண்டுமோ அவற்றையே நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

தற்பொழுது சிறுபான்மைச் சமுகமாகிய நாம் ஆதிக்கம் செலுத்தும் பெரும்பான்மைச் சமூகத்தின் மடியிலிருந்து கொண்டே நமது வாழ்வையும், நலனகளையும், உரிமைகளையும் எப்படிப் பாதுகாப்பது?

பெரும்பான்மையோரின் மத்தியில் இருக்கும் சிறுபான்மைச் சமூகம் சாத்தியமான எல்லைகளுக்குள் பெறவேண்டிய அதிகாரங்களை எப்படிப் பெறுவது?

அண்மையில் கௌண்டர் பொயின்ற் (Counter Point) க்கு அன்டன் பாலசிங்கம் அளித்த பேட்டியிலிருந்து. (நவம்பர்)

கௌ. பொ.: வெளியேற விரும்பும் மக்களைப் போக வேண்டாம் எனத் தடுக்கும் நீங்கள் இதற்கு எதிர்மாறாக முஸ்லிம் மக்களைப் போகச் சொல்லச் சொன்னீர்கள். இதை எப்படி விளக்குவீர்கள்.

"வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள், நிலைமை சுமுகமானதும் திரும்பி வர அனுமதிக்கப்படுவர்."

# "முஸ்லிம்கள் திரும்பி வரலாம்"

அ. பா: முஸ்லிம் மக்களின் நிலைமை தனியாக ஆராயப்பட வேண்டிய தொன்று. கிழக்கில் ஆயுதமேந்திய முஸ்லீம் குழுக்களினால் பெருமளவு வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதற்கு பதிலாக ஒரு வன்முறை வெடிப்பதைத் தடுக்கவே நாம் அவர்களைப் போகச் சொன்னோம். ஆனால், நிலைமை சுமூகமானதும் அவர்கள் திரும்பிவர அனுமதிக்கப்படுவார்கள் என்றும் நாம் கூறினோம். நீங்கள் இந்த விளக்கத்தால் திருப்தி அடைவீர்கள் என நான் நினைக்கவில்லை.

கௌ.பொ: ஆம்! ஏனென்றால் 14 வருடங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் போதித்த பேராசிரியர் நுஃமான் போன்றவர்கள் குறித்து என்ன சொல்லப் போகிறீர்கள்? தெற்கிலோ சிங்கள பேரினவாதிகளும் இதைத்தானே செய்தார்கள்! கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் போன்றதல்லவா, இதுவும்?

அ.பா: பிரச்சினை என்னவென்றால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் எவ்வாறு கொடுமைக்குள்ளானார்கள், எவ்வாறு ஆயிரக்கணக்கில் இந்தியாவுக்கு ஓட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். என்பது பற்றிய எமது பிரச்சினையை உங்களால் பார்க்க முடியவில்லை என்பதே. கிழக்கு மாகாணத்திலிருந்து 3000 தமிழர்கள் துடைத்தெறியப்பட்டார்கள். இவற்றில் பல அரச பின்பலத்துடன் முஸ்லீம் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டவையே.

கௌ.பொ: அதுதான் முக்கியமான விடயம், இந்த விடயங்கள் எவ்வளவுதான் உண்மையானதாக இருந்த போதும் இந்தக் கொலைகளையிட்டு முஸ்லிம் சமூகம் ஒரு சமூகம் என்ற முறையில் எதையாவது செய்திருக்க முடியுமா? உதாரணமாகப் பயங்கரவாதத் தாக்குதல்களையும், குண்டு போடுதல்களையும் பற்றி நடக்கும் விவாதங்களையும் பாருங்கள் இந்தத் தாக்குதல்களையிட்டு தமிழர்கள் என்ற முறையில் அவர்களால் எதனையாவது செய்ய முடியுமா? கொழும்பில் வைக்கப்பட்டிருக்கும் குண்டு ஒன்று புள்ளிவிபர அடிப்படையில் ஒரு தமிழரால் வைக்கப்பட்டிருப்பதற்கான நிகழ்தகவே அதிகமாக இருப்பதால் நூற்றுக்கணக்கில் தமது அன்றாட அலுவல்களைக் கவனித்துவரும் அப்பாவித் தமிழர்களைக் கைது செய்வதையோ, துன்புறுத்துவதையோ நியாயப்படுத்திவிட முடியுமா?

அ.பா. அப்படியானால் ஏன் சிங்களப் பொதுமக்களிடமிருந்து பரந்தளவில் சிங்களப் பேரினவாத இனஅழிப்பு நடவடிக்கைகளில் அரசு ஈடுபடும் போது எதிர்ப்பு எதுவும் கிளப்பவில்லை.

கௌ.பொ. : திரும்பவும் 50,000 முஸ்லிம்கள் வெளியேறுமாறு கோரப்பட்டபோது தமிழர்கள் ஏன் மௌனமாக இருந்தார்கள் என்ற அதே கேள்வி எழுகின்றதல்லவா?

அ.பா. : இதில் எந்தவொரு முஸ்லீமும் வன்முறைக்குள்ளாக்கப்படவில்லை. எம்மினரால் கொல்லப்படவோ அல்லது துன்புறுத்தப்படவோ இல்லை.

கெள.பொ: பாரம்பரியத் தாயகக் கோட்பாடு மிகத் தெளிவாகக் காட்டுவது என்ன வென்றால் தமது சொந்த இடத்திலிருந்து அவர்களைப் பலவந்தமாக வெளியேற்றுகின்ற மிகப் பெரிய வன்முறை யையே என்றுதான் இதனைக் கருதவேண்டியிருக்கிறது. வடக்கு கிழக்கில் இனச் சுத்திகரிப்பைச் செய்வது விடுதலைப் புலிகளின் ஒரு கோட்பாடாக உள்ளதா?

அ.பா: இல்லை.

**நன்றி : கெளன்டர் பொயின்ட் (நவம்பர்**

'அகதி'கள் பிரச்சினைகளை ஆராயவும் உதவிகள் வழங்கவும் விஷேட குழு வருகிறது.

இலங்கையில் 'அகதி' ப்பிரச்சினை ஆரம்பித்த காலத்திலிருந்து தொடர்ச்சியாக சலைக்காமல் 'அகதி'களுக்காக 'குரல்' கொடுத்து அவர்களுக்காக அல்லும் பகலும் சேவையாற்றிவரும் அகதிகள் நிவாரண அமைப்பின் (ஆர்.ஆர்.ஓ) தலைவர் சேர் ஏ.டபில்யூ.எம். அமீர் அவர்கள் அண்மையில் உலக அரசமைப்பு பாராளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் பங்குபற்றுவதற்காகச் சென்றிருந்த பொழுது, அங்கு சமூகம் தந்திருந்த பிரமுகர்களிடம் அகதிகளின் பிரச்சினைகளைப் பற்றி எடுத்துரைத்ததோடு, மத்திய தெற்கு அமெரிக்காவிலும், கரீபியன் நாடுகளிலிருந்தும் முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளை இலங்கைக்கு வந்து நேரடியாக நிலமையைப் பார்த்து உதவிகள் வழங்கும் படியும் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை ஏற்று விரைவில் இப்பிரமுகர்கள் குழுவொன்று இது தொடர்பான விடயங்களை ஆராய இலங்கை வரவுள்ளது.

# வெள்ள, அகதிகள்:

நாட்டின் சகல பகுதிகளிலும் வெள்ளத்தால் இரண்டு இலட்சத்துக்கும் அதிக மானோர் 'அகதி' களானார்கள்.

கடந்த மாதம் நாட்டில் பெய்த அடைமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு 2 இலட்சத்துக்கும் அதிக மான மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். இவ் வெள்ளம் மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, புத்தளம் மாவட்டங்களை மிகக் கடுமையாகப் பாதித்துள்ளது. இது தவிர பொலன்னறுவ, அநுராதபுர மாவட்டங்களிலும் பல குளங்கள் உடைப்பெடுத்து அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இதில் மிகவும் கஷ்டங்களை அனுபவித்தவர்கள் ஏற்கனவே வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு இம்மாவட்டங்களில் 'அகதி' முகாம்களில் வாழ்ந்து வந்த 'அகதி'களே. முகாம்களில் வெள்ளம் பாய்ந்ததால் அகதிகள் முகாம்களை விட்டு வெளியேறி பாடசாலைகளிலும் பொதுஸ்தாபனங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தற்பொழுது வெள்ள நீர் வடிந்து கொண்டிருக்கிறது. மீண்டும் மக்கள் அவர்களது பழைய இடத்துக்கு சென்று கொண்டிருக்கின்றனர். ஆனாலும் வீசிய புயல் காற்றினாலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும் குடிசைகள், வீடுகள், அடித்துச் செல்லப்பட்ட குடும்பங்கள் இன்னும் முகாம்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இவர்களது குடிசைகளை அமைத்துக் கொடுப்பதற்கும், வீட்டுச் சமையல் உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் சமூகசேவை ஸ்தாபனங்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

படிப்பினை தரும் தந்திரக் கதை.

# ஒன்றாகச் சிறகசைத்தால்

ஒரு பெரிய ஆலமரம். அதனுடைய கிளைகளில் நூற்றுக்கணக்கான பறவைகள் வசித்து வந்தன. அதன் பொந்துகளில் எறும்புகள், பூச்சிகள் என்று கணக்கற்ற சிற்றுயிர்கள். இவை தவிர வழிப்போக்கர்கள் பலரும் அம்மரத்தின் நிழலில் இளைப்பாறிச் சென்றனர்.

அந்த மரத்தில் வருபதனகன் என்ற காகம் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் இரை தேட அது புறப்பட்ட போது பயங்கர உருவங் கொண்ட ஒரு வேடன் மரத்தை நோக்கி வருவதைக் கண்டது. அங்கே வசிக்கும் பறவைகளைப் பிடிக்கவே அந்த வேடன் வருகின்றான் என்பதைப் புரிந்து கொண்டு மற்ற எல்லாப் பறவைகளையும் அழைத்து எச்சரித்தது.

தோழர்களே! துஷ்டனாகிய வேடன் வலையும், அரிசியுமாக வந்துள்ளான். அவனை நம்பாதீர்கள் அவன் அரிசியைச் சிதறி அதன்மீது வலையை விரித்துவிடுவான். அந்த அரிசிமணிகள் உங்களது பசியைப் போக்கு வதற்கல்ல மாறாக உங்களை ஏமாற்றி வலையில் சிக்க வைப்பதற்காக.

காகம் சொன்னது போலவே வேடன் முல்லைப்பூ போன்ற அரிசி மணிகளை தூவி விட்டு அதன்மீது வலையை விரித்து வைத்தான். பிறகு, சற்றுத் தூரத்தில் சென்று ஒளிந்து கொண்டான்.

காகத்தின் எச்சரிக்கையை ஏற்றுக் கொண்ட ஆலமரத்துப் பறவைகள் அரிசியைத் தின்னப் போகாமல் அமைதியாய் இருந்தன.

அப்பொழுது புறாக்களின் அரசனான சித்ரகிரீவனின் தலைமையில் ஒரு புறாக் கூட்டம் இரைதேடிப் பறந்து வந்தது. தொலைவில் இருந்தே அரிசி மணிகள் சிதறிக் கிடப்பதை அவை பார்த்து விட்டன. புறாக் கூட்டத்தை எச்சரிக்க காகம் எவ்வளவோ முயன்றும் முடியாமல் போய்விட்டது.

அரிசிமணிகளை நோக்கி ஆர்வத்துடன் பறந்து வந்த புறாக்கள் அனைத்தும் வலையில் மாட்டிக் கொண்டன. தூரத்தில் ஒளிந்திருந்த வேடன் மகிழ்ச்சியுடன் விரைந்து வந்தான்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் சித்ரகிரீவன் சற்றும் பதறவில்லை. புறாக்களுக்கு ஆறுதல் கூறியது. அஞ்சாதீர்கள் ஆபத்தான கட்டத்தில் புத்திக் கூர்மையுடன் செயற்பட்டால் நிச்சயம் தப்பித்துக் கொள்ள லாம். அதில் சந்தேகம் இல்லை. காலம் நல்லதோ, கெட்டதோ சூழ்நிலை இணக்க மானதோ இல்லையோ ஞானிகள் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பர். சூரியன் உதிக்கும் பொழுது ஒரே நிறம் தான், மறையும் போதும் ஒரே நிறம்தான். ஆகவே, நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் சற்றுப் பயமோ குழப்பமோ இல்லாமல் வலையுடன் வேகமாக உயரக் கிளம்பிப் பறப்போம். வேடன் காணாத இடத்திற்குச் சென்றதும் நம் கால்களை வலையிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம். இப்படிச் செய்யாமல் வெறுமனே பயந்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் மரணம் நிச்சயம்.

வேடன் வருவதற்குள் புறாக்கள் அனைத்தும் ஒற்றுமையுடன் சிறகை விரித்து ஜிவ் என்று உயரக் கிளம்பி பறந்தன. அவை தப்பித்து விட்டன. வேடனோ இருந்த வலையையும் இழந்து நின்றான்.

இது ஒரு பஞ்சதந்திரக் கதைதான் ஆனாலும், கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்

தன்னைப் பின்பற்றுவோரை காப்பாற்ற வேண்டுமென்ற சித்ரகிரீவனின் அக்கறை, அவனுடைய அறிவுரை, துணிச்சல், புத்திக் கூர்மை, சோதனையான கட்டத்திலும் கலங்காத மனம் தலைமைக்குக் கட்டுப்பட்ட புறாக்கூட்டம் அதன் ஒற்றுமை.

அடடா சமுதாயத் தலைமையும் சமுதாய மும் எப்படி இருக்க வேண்டும். என்பதை சின்னஞ் சிறிய அந்தப் புறாக்கூட்டம் உணர்த்தி விட்டதே.

நம்மவர்கள் புரிந்து கொண்டால் சரி.

# தன்னம்பிக்கை ஊன்றுக

இலங்கைத் தீவில் அதன் அழகுக்கு சிதை வைத்தாற்போல் இனப்பிரச்சினை பற்றி எரிகிறது. இதன் நிமித்தம் தினம் தினம் பல உயிர்களும் பல கோடி உடைமைகளும் நாசமாக்கப்படுகிறது.

இலங்கை நாட்டின் மூன்றாவது சிறுபான்மைச் சமூகமாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இவர்கள் இரு பெரும் சமூகமான சிங்களவர் - தமிழர் ஆகிய இரு இனத்திற்கும் மத்தியில் உரலில் அகப்பட்ட அரிசி போல் மாவாக இடிக்கப்பட்டுக் கொண்டுருக்கிறார்கள்.

இலங்கை வரலாற்றில் ஏனைய பெரும்பான்மை இனத்தவர்களுக்கு எந்தளவு முக்கிய இடம் உள்ளதோ அதே முக்கியத்துவம் இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் உண்டு.

ஆனால் இன்றைய இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆனால் ஏனைய பெரும்பான்மை இனத்தவர்கள் பாதிக்கப்பட்டு அடையும் துன்பங்களை விட முஸ்லிம்கள் அடையும் துன்பங்களே அதிகமானதாகும்.

இன்று இலங்கையில் இனப்பிரச்சினையால் எந்த ஒரு சமூகத்திற்கும் ஏற்படாத ஓர் மோசமான அனுபவமாக வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் அமைகிறது.

தமிழர்கள் சிங்களப் பேரினவாதத்தைப் பற்றி பேசும் பொழுதும் அவர்களுடைய இனரீதியான விவாதங்களின் போதும் வடக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இந்த அவலநிலை போன்று ஓர் வரலாற்று சம்பவத்தை அவர்களால் எடுத்துக் கூறமுடியாது. வரலாற்றில் இப்படி இடம் பெற்றதாக அவர்களது இலங்கை சரித்திரத்திலும் இல்லை.

அந்தளவுக்கு வடக்கு முஸ்லிம்களுக்கு இந்த இனப்பிரச்சினை தாங்க முடியாத பலமான ஓர் பளுவை - தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. ஆனால் இச்சம்பவம் எம்மை பலவீனப்படுத்தி விடக்கூடாது.

ஏனெனில் ஒரு சமூகத்தின் வீழ்ச்சி அச்சமூகம் தன்னம்பிக்கையிழப்பதன் மூலம் ஆரம்பமாகிறது.

ஆகவே இன்று 'அகதி' என்ற நிலையில் இருக்கும் முஸ்லிம் மக்கள் குறிப்பாக வடக்கு முஸ்லிம் மக்கள் தம்மிடத்தில் உள்ள மிகப் பெறுமதியான சொத்தாகிய தன்னம்பிக்கையை இழந்துவிடக்கூடாது.

## அறியாமைக்கால அழைப்பு

பனு முஸ்தலிக் போர் என்பது பனு முஸ்தலிக் எனும் கோத்திரத்தாருடன் நடைபெற்ற ஒரு பிரபலமான போர் ஆகும். இந்த சந்தர்ப்பத்தில் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்று குடியேறிய முஸ்லிம்களும் (முஹாஜிரின்களும்) மதீனா வாழ் முஸ்லிம்களாகிய அன்ஸாரிகளும் நபியவர்களுடைய படையில் இருந்தனர்.

ஒரு கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும் பொழுது முஹாஜ்ரின் தோழருக்கும் அன்ஸாரித் தோழருக்கும் இடையே எதிர்பாராத வகையில் தகராறு ஏற்பட்டது.

அப்பொழுது அன்ஸாரித் தோழர் பிற அன்ஸாரிகளை அழைத்தார் வாருங்கள்! எனக்கு உதவி செய்யுங்கள் என்று. இது போன்றே முஹாஜிர் தோழர் பிற முஹாஜிர்களை அழைத்தார் வாருங்கள்! எனக்கு உதவி செய்யுங்கள்! என்று. ஒரு அன்ஸாரி பிற அன்ஸாரிகளையும் ஒரு முஹாஜிர் பிற முஹாஜிர்களையும் உதவிக்கு அழைப்பு விடுக்கும் குரலைக் கேட்டு நபி (ஸல்) அவர்கள் உடனே வெளியே வந்து கூறினார்கள், அறியாமைக் காலத்தினுடைய அழைப்பை நீங்கள் ஓங்கி முழங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.. இதனை விட்டுவிடுங்கள். இது அறியாமைக்கால அழைப்பாகும்.

ஆதாரம் - ஸீரத்துல் ரஸூல்

# நமது கடமை என்ன?

அமைதிக்கும், சமாதானத்திற்கும் சுமூகமான வாழ்க்கை முறைக்கும் முஸ்லிம் என்ற வகையில் நாமே பொறுப்பாளியாக அல்லாஹ்வினால் ஆக்கப்பட்டிருந்தோம். நாம் அதே மகத்தான கண்ணியமான நமது கடமையை நிறைவேற்றத் தவறியதால் அமைதியை, சமாதானத்தை தற்போது இழந்து நிற்கிறோம். இதில் அதிகமான பாதிப்புக்குரியவர்களாக நாம் ஆளாக்கப்பட்டோம்.

எதற்காக நாம் முஸ்லீம்கள் என்று கூறப்படுகிறோமோ, எதன் தொடர்பினால் நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இஸ்லாத்தின் பிரதிநிதிகளாக தீர்மானிக்கப்படுகிறோமோ அதை நாங்கள் சரிவர உணர்ந்து வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தினால் நாம் இம்மையில் தலைநிமிர்ந்து வாழ்வதோடு மறுமையிலும் வெற்றியைப் பெறுவோம். நம்மீது படர்ந்துள்ள அச்சம், துயரம், மானக்கேடு, இழிவு, தாழ்வு, அடிமைத்தனம், ஆகியவைகள் சில ஆண்டுகளுக்குள் விலகிப் போய்விடும்.

நாம் இந்த அடிப்படையில் எமது வாழ்வை அல்லாஹ்விற்குப் பயந்து, உண்மை முஸ்லிமாக சொல்லாலும், செயலாலும் பூரண சான்று வழங்கினால் எமது இத்தகைய தூய வாழ்விற்குமுன் நிராகரிப்புக் கொடி தாங்கிகளின் அடாவடித்தனங்கள் எதுவுமே எஞ்சி நிற்காது. இஸ்லாத்தை உண்மையாகப் பின்பற்றுவோராயும், அதன் உண்மையான சான்று வழங்குவோராயும் மாறிவிட்டால், இத்தகைய நல்ல காலம் நமக்காக காத்திருக்கின்றது.

## பாணந்துறையில் வசிக்கும் அகதிகளுக்கு இலவச மருத்துவ முகாம்.

'போரூட்' நிவாரண அமைப்பின் உதவித் திட்டத்தின் கீழ் இந்த இலவச மருத்துவ முகாம் பிரதி 15 நாட்களுக்கு இருமுறை நடத்த தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

இம் மருத்துவ முகாம் அண்மையில் தொட்டவத்தையில் நடத்தப்பட்டது. இலவச மருத்துவ முகாமிற்கான நடவடிக்கையை இடம்பெயர்ந்த முஸ்லிம் அகதிகள் சங்கத் தலைவர் யூ.எம். ஸாபி, செயலாளர்; எஸ்.எம். அன்சார் ஆகியோர் மேற்கொள்கிறார்கள். இதில் கொழும்பு பெரியாஸ்பத்திரி டாக்டர் ஜாபிர் எம்.சரீப் தலைமையில் வைத்தியர்கள் குழுவொன்றும் சிகிச்சை அளித்தது குறிப்பிடத்தக்கது.

## மூன்றுக்குள் மூன்று

**(1.) இந்த மூன்றைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்-**

1. எண்ணம். 2. உடல், 3. ஆடை,

**(2.) இந்த மூன்றுக்கு தயாராகுங்கள்.**

1. துயரம் , 2. வீழ்ச்சி, 3. மரணம்.

**(3.) இந்த மூன்றுக்காகப் போராடுங்கள்.**

1. கொடுமைக்காளானோருக்காக
2. உரிமை வென்றெடுப்பதற்காக.
3. இழந்த தாயகத்துக்காக .

## வாசகர்கள் கவனத்திற்கு......

கட்டுரைகள், கதைகள், கவிதைகள், போன்ற ஆக்கங்களும் மற்றும், கடிதங்களும் எழுதும் போதும் அகதிகளாயின் தங்களுடைய சொந்த ஊர் முகவரியையும், தற்போதைய முகவரியையும் குறிப்பிட வேண்டும். முகவரியில்லா படைப்புக்கள், கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

அன்று வெள்ளிக்கிழமை. ஜும்ஆத் தொழுகைக்காக 'வெள்ளவத்தைப் பள்ளிவாசலுக்குச் சென்று கொண்டிருந்தேன். நடைபாதையும் தொழுகைக்குப் போபவர்களால் நிரம்பியிருந்தது. ஓரமாக பல ஏழைகள் வருவோர், போவோரை யாஸித்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், பள்ளிவாசலில் தொழுவோர் எண்ணிக்கை அதிகரிப்பதைப் போல யாஸகர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். அந்த நாட்களில்தான் அதிகமான மனதுகளுக்கு இரக்கம் வருகுதோ தெரியாது!

பள்ளிவாசலை நெருங்கியதும் ஒரு பெண்ணின் பேச்சுக் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். பள்ளிக்கு வந்த பலரும் பேச்சுவந்த திசையில் பார்த்துக் கொண்டிருந்தனர். தடித்த, கறுத்த ஒரு பெண் மரநிழலில் உட்கார்ந்து கொண்டு மேடைப் பிரசங்கியைப் போல் சைகைசெய்து பேசிக்கொண்டிருந்தாள். அவளை நான் பள்ளிக்கு வரும் போதெல்லாம் கண்டிருக்கிறேன். எப்போதும் வீதியோரத்திலேயே கிடப்பாள். சிலவேளைகளில் கறுத்த 'பர்தா' அணிந்திருப்பாள். வீடற்ற, ஆயிரமாயிரம் தெருவோர வாசிகளில் இவளும் ஒருத்தி என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் அன்று அந்த நினைப்பில் இன்னொன்றையும் சேர்க்கச் செய்துவிட்டது. ஆம்... பைத்தியம் ...என்னால் நம்ப முடியவில்லை. என் முன்னைய அவதானங்களில் அதற்கான எந்த அறிகுறியும் அவளிடம் இருக்கவில்லை. ஒரு வேளை தெருவோரத் தனிமை அப்படி ஆக்கி விட்டேதா தெரியாது.




"இதற்கெல்லாம் யார் காரணம்".... "நாட்டில் குழப்பம் நடக்கிறது.... உடனே சண்டையை நிப்பாட்டுங்கள்".......... "பிளேன் விஞ்ஞானி வந்தான்" என்றெல்லாம் என்னவெல்லாமோ பேசிக்கொண்டிருந்தாள். வானொலி அறிவிப்பாளிகளைப் போன்று சுத்தமான, கணீரென்ற குரல். இவள் நல்ல நிலையில் இருந்து எதுவித 'புஷ்'ஷும் இல்லாமல் குரல் இனிமையைப் பரீட்சித்தால் அறிவிப்புத் தொழிலுக்கு உடன் எடுபடுவாள் போல் தோன்றியது. அப்படியொரு ஆகர்ஷிக்கும் குரல்!

என்னவெல்லாமோ வார்த்தைகளுக்கு வார்த்தை தொடர்பில்லாமல் பேசிக்கொண்டிருந்தாள். நல்ல நிலையிலுள்ளவர்களே அப்படிப் பேசும்போது ... இவள் பேசினால் என்ன!-?

அடிக்கடி "பிளேன் விஞ்ஞானி வந்தான்" என்ற சொல்லைப் பாவித்தாள். எதனாலோ பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பதும், அந்த 'எதனால்' என்ன என்பதும் புரிந்தது. தாக்குதல்களின் நெருக்குதலால் அகதியாகி, அநாதையாகி, இப்போது

பைத்தியமுமாகிவிட்டாள் என்பது புரிந்தது. தொடர்ந்து நிகழும் யுத்தங்கள் பல ஆயிரம் பேரை பைத்தியமாக்கியிருக்கிறது என்று அண்மையில் பத்திரிகையில் கூடவந்தது.

பிறந்து வளர்ந்து வாழ்ந்த பூமியை விட்டு ஓட ஓட எத்தனையோ பேர் விரட்டப்பட்டிருக்கிறார்கள். எப்படியெல்லாமோ வாழ்ந்தவர்கள் இன்று எப்படி ஆகியிருக்கிறார்கள்.. ஒரே ஓலைக் குடிலுக்குள் சுருங்கிக் கொள்ளும் எத்தனையோ குடும்பங்கள் ...... இந்த நிலை ஏற்பட நாங்கள் என்ன செய்தோம்? என்ற கேள்விகளை ஒவ்வொருவரும் வைத்துக் கொண்டு விடை தெரியாமல் திரிகிறார்கள்.

"ஒரு மனிதனுக்கு வாழும் உரிமை கூட மறுக்கப்பட்டால் அவன் என்னாவது! பலஹீனப்பட்டவர்கள் இப்படித்தான் பைத்தியமாவார்கள்."

உலகெல்லாம் முஸ்லிம்களுக்கு இந்த உரிமைதானே மறுக்கப்படுகிறது. சொந்த பூமியில் கூட அவர்களால் வாழ முடியாதுள்ளது."

"சில மணி சிலநாள் அவகாசத்துக்குள் ஒன்றரை லட்சம் பேரின் வாழும் உரிமை பறிக்கப்பட்டதென்றால்........"

"எமது இந்த சின்னஞ்சிறு தீவிலிருந்து அக்கம் பக்கத்து நாடுகள் வரை முஸ்லிம்களுக்கு அவர்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்தினால் இது தானே நடக்கிறது" இப்படி பலவாறு என் சிந்தனை சிதற பள்ளிக்குள் நுழைந்து 'தஹிய்யதுல் மஸ்ஜித்' தொழுகை தொழுதுவிட்டு ஓர் ஓரமாய் உட்கார்ந்தேன்.

இமாம் மிம்பரில் ஏறி பிரசங்கத்தை ஆரம்பித்தார். இலங்கையின் முன்னனி இமாம்களில் ஒருவர் அவர். அவரின் குத்பா என்றால் பலர் பல இடங்களிலிலிருந்தும் கேட்க வந்துவிடுவார்கள். அவருக்கு நடைமுறை தெரிந்திருந்தது. பள்ளிவாசலின் மிம்பரின் பங்கு என்ன என்பதும் தெரிந்திருந்தது. பேசத் தொடங்கினார்.

"நாம் இன்று ஹி 1414 ம் ஆண்டுக்குள் அதாவது இஸ்லாமிய ஆண்டின் புதுவருட ஆரம்பத்திற்குள் நுழைந்திருக்கிறோம்... இது முஹர்ரம் மாதம் .. பல முக்கிய நிகழ்வுகளுக்குரிய மாதம். ஆனாலும் நாம் அதனை அவரவர் அறிவுக்கேற்ப விளங்கி அதுவேதான் சரியானது. இதை இந்த மாதத்தில் செய்தால் போதுமானது. என்றெல்லாம் தவறாகக் க. ணித்துச் செயற்பட்டு வருகிறோம்.

ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்றால் போதுமானது... அல்லது சில நிகழ்ச்சிகளை நடத்தினால் போதுமானது. என்றெல்லாம் நடைமுறையிலுள்ளது. ஆனாலும் இன்று அதைவிட முக்கியமாக முஸ்லிம்கள் பற்றி, அவர்களுக்கு நடக்கும் கொடுமைகள் அநீதிகள் பற்றி... வீடிழந்து, ஊரிழந்து தவிக்கும் அகதிகள் பற்றி இதுபோன்ற பலவிடயங்களைப்பற்றி சிந்திப்பதும், கதைப்பதும் செயற்படுவதும் கடமையாயிருக்கின்றது. ஆனாலும் நாம் இதுபற்றி எந்த சிந்தனையும் அற்றவர்களாக அவரவர் அவரவர் பாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 'முஃமின்கள் யாவரும் ஒரு கட்டிடத்தின் கற்களைப் போன்றுநெருக்கமானவர்கள்',

முஃமின்கள் உடலுறுப்பைப் போன்றவர்கள். ஓர் உறுப்பு காயப்பட்டால் மற்ற உறுப்புக்கும் வலிக்கும்! என்றெல்லாம் கூறிய நபி பெருமானாரின் வார்த்தைகள் பற்றி நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

ஒருவனுக்கு வாழும் உரிமை எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சிலர் சொல்கிறார்கள் 'ரஸூலுல்லாஹ் 13 வருட காலம் கலிமாவுக்காக கஷ்டப்பட்டார்கள்' என்று... இது கொச்சையான தவறான விளக்கமாகும். வெறுமனே

கலிமாச் சொல்லவைப்பதற்காக அவ்வாறு கஷ்டப்படவில்லை. கலிமாச் சொன்ன சமுதாயம் வாழவேண்டும்; அதற்கென்ற தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். கலிமாவின் அடிப்படையிலான வாழ்வுக்கு சமூகமாய் வாழவேண்டிய இருப்பிடம் தேவை... மனித இருப்பு முக்கியமானது. ரஸூலுல்லாஹ்வின் ஹிஜ்ரத் வாழ்விலும் இதைத்தான் நாம் அறிகிறோம். மதீனாவுக்குச் சென்ற முதல் வேளையாக அங்கொரு பள்ளியை நிறுவினார்கள். ஒரு முஸ்லிம் சமூகத்தின் இருப்புக்கான முக்கிய தேவை பள்ளியாகும். இன்று எம்மவர்கள் வாழ்ந்த இடங்களையும் ஏகனை வணங்கிய எண்ணற்ற பள்ளிகளையும் விட்டு விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையில் இதுபற்றிய சிந்தனையும் செயற்பாடும்தான் இந்த ஹிஜ்ரி புதுவருடத்தின் பயனுள்ள நிகழ்வாயிருக்கும்."

என்றெல்லாம் மிகவும் பயனுள்ளதாய், பலருக்கும் படக்கூடியதாய்ப் பேசினார். ஒரு திருப்தியான 'பயானை'க் கேட்ட திருப்தி என்னுள் நிறைந்தது. குறைவானோரே தூங்கி வழிந்தனர் போல் தெரிந்தது. இவரைப் போல் பயனுள்ள உரை நிகழ்த்தும் உலமாக்கள் இருந்தால் எத்தனையோ மக்களை விழிப்படையச் செய்யலாம்.

தொழுது முடிந்து வெளியே வந்தேன். 'நோடீஸ்' கொடுத்துக் கொண்டிருந்தார்கள். 'பொஸ்னியாவில் நடப்பது என்ன?' என்பதுபற்றிய உரைக்கான அழைப்பு. அன்று எல்லாம் பயனுள்ளதான நிகழ்வுகள்.

அவளும் அதே இடத்திலேயே இருந்தாள்... பேச்சொன்றும் இல்லை. இங்கு நடந்ததும், பொஸ்னியா, காஷ்மீர் போன்ற இடங்களில் நடப்பதும் தானே ... இவளை இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கிறது என்று நினைத்தவாறு 'ரூமை' நோக்கி நடந்தேன்.

## நடந்த கதை

நான், எனது பெற்றோர்,
பெற்றோரின் பெற்றோர்..,
எனது முன்னோர்...எல்லோரும்
பிறந்து வாழ்ந்த பூமியது...
'சில மனிதர்'களின் இதயங்கள்
இரும்பாகி கறல் பிடித்துப்
போக முன்னர்
நாம் பிறந்த பூமியில்
எமக்கென்றொரு
நல்ல வாழ்விருந்தது.

அதில்.. எல்லாம் கடந்து
எல்லோரும் ஒன்றாய்
வாழ்ந்தோம்........
சில நாட்களின் பின்
அந்தச் 'சிலர்' உறுமினார்கள்
பிறகென்ன...,
நாங்கள் உருக்குலைந்து
போய்
இப்போது
மூன்றாண்டுகளுமாகிவிட்டன.

## கடைசிப் பக்கக் கட்டுரை :

மாறி மாறி நடக்கும் உலக நிகழ்வுகள் இன்றைய இருப்பு நாளை என்னவாகுமோ என்ற நிலையில் போகும் இயந்திர உலகம். வளர்வா...தேய்வா...!?

எல்லாவற்றையும் கண்டுபிடித்துவிட்டு இருக்கின்றவைகளை இருக்க வேண்டியவைகளை தொலைத்து விட்டுத் தடுமாறும் பெரிய பெரிய உலகங்களும் அதன் தலைவர்கள் ....வால்கள்.

மனித இருப்பு பற்றி எங்குமே அவநம்பிக்கை தான்... யாரும் யார் பற்றிக் கவலையோ... அக்கறையோ படாமல் ஒதுங்கிக் கொள்ளும் வளர்ச்சித்தனம்...!

திரும்பும் வரை தெரியாதிருக்கும் பின்னால் நீட்டப்பட்டிருக்கும் கூரான ஆயுதம் ஆக்கிரமிப்பு அடக்குமுறை. சர்வாதிகாரம் ஜனநாயகம், முதலாளித்துவம், கம்யூனிஸம், போராட்டம், பயங்கரவாதம் இயக்கம், கொள்கை, சுதந்திரம், விடுதலை, அடிப்படை வாதம்.... எல்லாம் அடிக்கடி கேட்கவும் பேசவும் படுகின்ற சொற்கள். ஆக .. உலகம் இதிலெல்லாம் இயங்கிக் கொண்டிருக்கிறது. எண்ணிக்கையில் பயனில்லாத பணபலத்தில் பெருகிக் கொண்டு போகும் சில சில நாடுகள்... வாலாட்டிக் கொண்டு, அல்லது இன்னொன்றின் வாலைப் பிடித்துக் கொண்டு .... சமூகத்தையும் சமயத்தையும் விற்றுக் கொண்டு......

எங்கும் எல்லோராலும் நசுக்கப்பட்டு, பிழியப்பட்டு இருப்பே மறுக்கப்பட்டுப் போகும் எம்மவர் அவலங்கள்.... காணப்படாத அல்லது காணப்பட முடியாத ஒரு கானல் நீர் போலத்தான் எல்லார் கண்களுக்கும் இப்போது தெரிகிறது.

கூடுதல் பலமல்ல என்பதையும் ,பலம் என்றால் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டிய சூழல் ..........

திரும்பும் திசையெல்லாம் அடிபட்டுக் கொண்டே வாழ்கின்ற எம் சமுதாயம் எதை இழந்திருக்கிறது...? அல்லது எதை வைத்திருப்பதால் இவ்வாறு தாக்குதல்களுக்குள்ளாகிறது. என்பது கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இன்று உலக நாடுகளில் சிறுபான்மையினருக்கெதிரான அடக்குமுறை நடவடிக்கைகள் பலவடிவங்களில் இடம் பெறுகிறது. அதிலும் குறிப்பாக முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் வன்மமடைந்த ஒன்றாகவுள்ளது. இதனை எம் இங்கேயே அனுபவத் தொடர்கள் அழகாய்க் காட்டும்.

யாராக இருந்தாலும் நியாயமான உரிமைப் போராட்டங்களை மதிக்க வேண்டும், இன ஒடுக்குமுறைக்கு எதிராய்க் குரல் எழுப்பவேண்டும், இலங்கையின் சிறுபான்மை இனங்கள் மீதான பௌத்த பேரினவாத அடக்கு முறையோ .... முஸ்லிம் மக்கள் மீதான 'புலிவாத' இன ஒடுக்கலோ எதுவோ கண்டிக்கத்தக்கவை.

சுற்றம் சூழலை அவதானிப்போம் ..... என்ன செய்தோம் என்று தெரியாத நிலையிலேயே தண்டனை அனுபவிப்பவர்கள் முஸ்லிம்கள்தான் ஒவ்வொரு ஆக்கிரமிப்பின் போதும் அதிகமாய்ப் பறிபோவது எம் பெண்களின் கற்புத்தான் ...... அதிகமாய் ஓட்டப்படுவது எம் சோதரங்களின் இரத்தம்தான் ..... அநாதைகள், விதவைகள், அகதிகள் .. ....எண்ணிப்பார்க்கத் தேவையில்லை ... நாங்கள் தான் அதிகம்.

# எந்த வேடம்?

ஆறாண்டுகள் முஸ்லீம்
கல்லூரியிலே கல்வி பயின்றேனா
ஆறாம் வகுப்பிலே பாதிநேரத்துடன்
வீட்டுக்கு திரும்பி அனுப்பப்பட்டேனா
அம்மா ஏன் என கேட்டாளா?
பாதிசட்டையுடன் கல்லூரிக்கு
வரவேண்டாமாம்... சிணுங்கினேனா.
பாய்சூட்டும், சட்டையும் முந்தானியும்
போட்டு வரட்டுமாம்... என்றேனா!
முகம் சுளித்த அம்மா!
பொய் சமாதானம் செய்து
மீண்டும் கல்லூரிக்கு
அனுப்பிவைத்தாளா?
அடுத்த நாளும் திருப்பி
அனுப்பப்பட்டேனா?

கோப்பரேட்டிவ் கடையினிலே
வெள்ளை துணி வாங்கி
முகமது டெய்லரிடம் கொடுத்து
பாய்சூட் தைத்து தந்தாளா
வெட்கத்துடன் மாட்டிக்கொண்டு
வகுப்புக்கு போனேனா
முன்பியாவும், சியானாவும்
யா அல்லா
பசுந்தாயிருக்குதடி (அழகாக)
என்றார்களா!



இப்போதெல்லாம் காதர் டீச்சர்
சொணங்கி போனாலும் பேசமாட்டாளா
காலைக்கூட்டத்தில் தொழும் போது
நானும் முக்காடிட்டுக் கொள்வேனா
தொழுகை முடிய சதக்கல்லாவு மௌானா அலிம்
என்பேனா
நண்பிகள் ஓரக் கண்ணால்
கண்சிமிட்டுவாள்களா

வீட்டினிலே பாய் பாய் என
கேலி செய்வாளா என் அக்கா
ஒரு நாள் பஸ்சினில் வரும் போது
பஸ்சுக்குள்ளிருந்து தெமலு தெமலு
என இழுத்து வெளியே தள்ளி
உதைத்தார்களா
நான் மட்டும் ஒரு தெசிமாவாக
முக்காடிட்டு நின்றேனா
என்னைக் கடந்து அவர்கள் சென்றார்களா

சில நாட்களில் பின்
அக்காவும் பாய்சூட் அணிந்து
என்னுடன் கல்லூரிக்கு வர
பழகிக் கொண்டாளா
முஸ்லீம்களை போல் வேடம்
போட்டு எம்மை காப்பாற்றி கொண்டோமா
அவர்களே வடக்கிலிருந்து
துரத்தியடிக்கப் பட்டார்களா
அவர்கள் எந்த வேடத்தை போட்டு
வாழ முடியும்........

ஜி. மொனிக்கா

ஆயுத முனையில் வட மாகாண முஸ்லிம்கள் அகதிகளாக பலவந்த மாக வெளியேற்றம் - ஒக்டோபர் 28-30, 1990.

